**செய்தி வெளியீடு எண்: 551** **நாள்: 16.08.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று **(16.8.2018)** தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் நாமக்கல் மாவட்டம் – நாமக்கல், சேந்தமங்கலம் மற்றும் பரமத்தி வேலூர் ஆகிய மூன்று வட்டங்களை சீரமைத்து மோகனூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மோகனூர் வருவாய் வட்டத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளிக்குடி, ஆர்.எஸ். மங்கலம், ஏரல், திசையன்விளை ஆகிய புதிய வருவாய் வட்டங்களை துவக்கி வைத்து, வேளச்சேரியில் 2 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம், பேரிடர் மேலாண்மைக்காக 1 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காணொலி கருத்தரங்கு மையங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மக்களை தேடி அரசு எனும் சீரிய கோட்பாட்டின்படி, அரசின் மக்கள் நலத்திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாக கொண்டு சென்று, அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நாமக்கல் மாவட்டம் – நாமக்கல், சேந்தமங்கலம் மற்றும் பரமத்தி வேலூர் ஆகிய மூன்று வட்டங்களை சீரமைத்து மோகனூரை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மோகனூர் வருவாய் வட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

மேலும், மதுரை மாவட்டம் – திருமங்கலம் வட்டத்தினை சீரமைத்து கள்ளிக்குடியை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கள்ளிக்குடி வருவாய் வட்டம், இராமநாதபுரம் மாவட்டம் – திருவாடனை மற்றும் பரமக்குடி வட்டங்களை சீரமைத்து ஆர்.எஸ்.மங்கலத்தை (இராஜ சிங்கமங்கலம்) தலைமையிடமாக கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஆர்.எஸ். மங்கலம் வருவாய் வட்டம், தூத்துக்குடி மாவட்டம் – ஸ்ரீவைகுண்டம் மற்றும் திருச்செந்தூர் வட்டங்களை சீரமைத்து ஏரலை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஏரல் வருவாய் வட்டம், திருநெல்வேலி மாவட்டம் – இராதாபுரம் மற்றும் நாங்குநேரி வட்டங்களை சீரமைத்து திசையன்விளையை தலைமையிடமாகக் கொண்டு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திசையன்விளை வருவாய் வட்டம், ஆகிய புதிய வருவாய் வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

சென்னை – வேளச்சேரியில், 7418 சதுர அடி பரப்பளவில், தரை மற்றும் முதல் தளத்துடன், 2 கோடியே 19 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், வட்டாட்சியர் அலுவலர் அறை, இ–சேவை மையம், ஆதார் மையம், தனி வட்டாட்சியர் அறைகள், பொதுமக்கள் காத்திருப்போர் அறை, கூட்டரங்கம், வருவாய் ஆய்வாளர் மற்றும் நில அளவையாளர் அலுவலக அறைகள் ஆகியவற்றை உள்ளடக்கி கட்டப்பட்டுள்ள புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

பேரிடர் காலங்களில், மீட்பு மற்றும் நிவாரண பணிகளை துரிதமாக மேற்கொள்வதற்கும், உயிரிழப்புகள் மற்றும் பொருட்சேதங்களை தவிர்க்கும் பொருட்டும், தகவல் தொடர்பினை துரிதப்படுத்தும் வகையிலும், சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலும் மற்றும் அனைத்து மாவட்ட தலைமையகங்களிலும் பேரிடர் மேலாண்மைக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மூலமாக 1 கோடியே 93 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காணொலி கருத்தரங்கு மையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். வருங்காலங்களில் ஏற்படக்கூடிய

பேரிடர்களின்போது, அவசரகால தகவல்களை எளிதாகவும், துரிதமாகவும் மாவட்டங்களுக்கு கொண்டு சேர்க்க இம்மையங்கள் பெரிதும் உதவி புரியும்.

பேரிடர் காலங்களில் மக்களுக்கு விரைவாக அவசரகால செய்திகளை கொண்டு சேர்க்க ஏதுவாக, தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்திற்காக 14 லட்சம் ரூபாய் செலவில், தமிழ்நாடு மின்னாளுமை முகமையின் மூலமாக உருவாக்கப்பட்டுள்ள "www.tnsdma.tn.gov.in" என்ற புதிய வலைதளத்தை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள். இந்த வலைதளத்தில் தமிழ்நாட்டின் புவியியல் அமைப்பு, நிலவியல், நீர் நிலப் புவியியல், வடிகால் அமைப்பு, மழையளவு, தமிழ்நாடு அரசின் பல்வேறு பேரிடர் மேலாண்மை திட்டங்கள், வானிலை அறிக்கைகள், பேரிடர்களை எதிர்கொள்ள எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள், தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் மற்றும் மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையங்களின் முக்கிய அலுவலர்கள் மற்றும் அவர்களின் தொடர்பு எண்கள், தேசிய மற்றும் சர்வதேச பேரிடர் மேலாண்மை அமைப்புகள் குறித்த விவரங்கள் போன்றவை இடம்பெற்றுள்ளன.

துணை ஆட்சியர் நிலையில் உள்ள அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 35 லட்சத்து 30 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான இணையதள வசதியுடன் கூடிய 462 டேப்லெட் (Tablet) கணினிகளை வழங்கிடும் அடையாளமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று 5 அலுவலர்களுக்கு டேப்லெட் கணினிகளை வழங்கினார்கள்.

சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 55 வருவாய் கிராமங்களுடன் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 67 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கி, மொத்தம் 122 வருவாய் கிராமங்களுடன் 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 3 வருவாய் கோட்டங்கள், 16 வட்டங்களை உள்ளடக்கிய பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்கு இணையாக விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாவட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.1.2018 அன்று துவக்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்கு

இணையாக விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாவட்டம் செயல்பட ஏதுவாக காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் பணிபுரிந்த பணியாளர்களை விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாவட்டத்தில் பணியமர்த்திடும் வகையில், முதற்கட்டமாக 5 வட்டாட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று பணிமாறுதல் ஆணைகளை வழங்கினார்கள்.

ஆசிய பேரிடர் ஆயத்த மையம் என்ற சர்வதேச மையமானது, பல நாடுகளின் அரசுகள், ஐ.நாவின் முகமைகள், கல்வி மையங்கள், தனியார் துறை ஆகியவற்றுடன் இணைந்து ஆசியா–பசிபிக் பகுதியிலுள்ள நாடுகள் மற்றும் இதர நாடுகளில் பேரிடர் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை கண்டறிதல், பேரிடர் குறைப்பு, பருவ மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளைக் கண்டறிதல் மற்றும் குறைத்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இம்மையம், வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தணிப்பு ஆணையரகத்தின் மூலம் தமிழ்நாடு அரசுடன் இணைந்து நீண்டகால அளவில் திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்திட விருப்பம் தெரிவித்துள்ளது. மேலும், இம்மையம், ஆப்பிரிக்கா மற்றும் ஆசியா பகுதிகளின் பல்வகை அபாயங்கள், சாத்தியமான தாக்கத்தின் மதிப்பீடு மற்றும் அவசர பதில் கண்காணிப்பு அமைப்பு (RIMES) மையத்துடன் இணைந்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்திடவும் விருப்பம் தெரிவித்துள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர்களின் திறனையும், தொழில்நுட்பத் திறனையும் மேம்படுத்தும் வகையில் பயிற்சி அளித்திட தமிழ்நாடு பேரிடர் குறைப்பு முகமை, பாங்காக்கில் உள்ள ஆசிய பேரிடர் ஆயத்த மையத்துடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்திட அரசாணை வெளியிடப்பட்டது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் முன்னிலையில் இன்று, பேரிடர் தணிப்புத் துறையின் சார்பாக, வருவாய் நிர்வாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., அவர்களும், ஆசிய பேரிடர் ஆயத்த மையத்தின் சார்பாக இயக்குநர் டாக்டர் ஹான்ஸ் குட்மன் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

அமைச்சர் டாக்டர் வி. சரோஜா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் டாக்டர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திரு. இராஜேந்திர ரத்னூ, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.8.2018**